/மிகவும் அவசரம்/ /சிறப்பு கவனம்/

தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6
ந.க.எண் 13029/இ1/2014, நாள் 04.2014.

--------

பொருள் தொடக்கக்கல்வி – ஊராட்சி / நகராட்சி/ அரசு தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகள் 01.09.2013–ல் உள்ள மாணவர்கள் எண்ணிக்கையின்படி உபரி இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் பணியிட நிர்ணயம் – விவரம் கோருதல் – சார்ந்து.

பார்வை அரசு நேர்முக கடித எண்.14263/SE2(1)/2014 நாள்.29.04.2014.

---

ஊராட்சி / நகராட்சி/ அரசு தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் 01.09.2013–ல் உள்ள மாணவர்கள் எண்ணிக்கையின்படி உபரி இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் பணியிட நிர்ணயம் மேற்கொள்ளுதல் சார்பாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் விவரங்களைப் பூர்த்தி செய்தல் சார்ந்து உதவித் தொடக்கக்கல்வி அலுவலர்களின் கூட்டத்தினை 02.05.2014 அன்று நடத்தி உரிய அறிவுரைகள் வழங்குமாறும் இணைப்பில் காணும் படிவங்களை சம்மந்தப்பட்ட உதவித் தொடக்கக்கல்வி அலுவலர்கள் பூர்த்தி செய்து அந்தந்த மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலரிடம் 05.05.2014 அன்று ஒப்படைக்க வேண்டும் எனவும், அவற்றினைச் சார்ந்த மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்கள் தொகுத்து, தொகுப்பு அறிக்கையினை சார்ந்த படிவங்களில் பூர்த்தி செய்து புத்தக வடிவில் இரு பிரதிகளில் 07.05.2014 – அன்று மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலக நேர்முக உதவியாளர் அல்லது கண்காணிப்பாளர் மூலம் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், ஒன்றிய வாரியாக அனைத்து படிவங்களையும் மாவட்ட வாரியாக தொகுத்து , தொகுப்பு படிவங்கள் தனித்தனியாக புத்தகவடிவில் கொண்டு வர வேண்டும்.

மேற்காணும் படிவங்களில் காணும் விவரங்கள் அடங்கிய சி.டி.யினையும் தவறாமல் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு– படிவங்கள் –8.

தொடக்கக்கல்வி இயக்குநர்

பெறுநர்

அனைத்து மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்கள்.